திரு. சி. கோவிந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூர் நகரத்தினுடைய மையப் பகுதியில் அறநிலையத் துறையின்கீழ் செயல்பட்டு வருகிற பெருமாள் கோயிலைச் சுற்றியிருக்கக்கூடிய இடங்களில், ஏற்கெனவே செயல்பட்டுவந்த வணிக வளாகம், கடந்த 10 ஆண்டுகளுக்கு முன்னாலே இடிக்கப்பட்டது. அப்போது, போக்குவரத்திற்கு இடையூறாக இருக்கிறது என்ற காரணத்தைச் சொல்லி, அது இடிக்கப்பட்டது. அந்த இடங்களிலே கடை வைத்தவர்கள் எல்லாம் நீதிமன்றம் சென்றார்கள். தற்போது நீதிமன்றத் தீர்ப்பும் அறநிலையத் துறைக்குச் சாதகமாக வந்திருப்பதாகத் தெரிகிறது. அந்த இடங்கள், இடிக்கப்பட்ட நிலையிலேயே 10 ஆண்டுகளாக அப்படியே கேட்பாரற்றுக் கிடக்கிறது. ஆகவே, அந்த இடங்களில் முறையாக அறநிலையத் துறையே தேவையான வணிக வளாகம் கட்டி, அதற்குரிய வருவாயை ஈட்டுவதற்கு முன்வருமா என்பதைத் தங்கள்மூலம் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமிருந்து அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, ஒருவேளை அது போக்குவரத்திற்கு இடையூறு இல்லாத இடமாக இருந்தால், எதிர்காலத்தில் அங்கே வணிக வளாகம் அமைப்பதற்குப் பரிசீலிக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 177, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. தமிழரசு, மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

177—

தரம் உயர்த்துதல்

***58177—திரு. அ. தமிழரசு:**

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர் தொகுதி, டேனிஷ்பேட்டை ஊராட்சி, பெரிய வடகம்பட்டி அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

2009 ஜூலை 20]

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

அரசாணை (நிலை) எண் 127, பள்ளிக் கல்வி, நாள் 15-6-2009-ல் சேலம் மாவட்டம், பெரிய வடகம்பட்டி அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தி ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. தமிழரசு.

திரு. அ. தமிழரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், எனது தொகுதியிலே இருக்கிற வடகம்பட்டி மேல்நிலைப் பள்ளியைத் தரம் உயர்த்திக் கொடுத்ததற்கு சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையிலும், தொகுதி மக்களின் சார்பாகவும் மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேவேளையிலே இதுபோன்று தரம் உயர்த்துகின்ற நிலையிலே, சட்டமன்ற உறுப்பினர்களாகிய நாங்கள், அந்தத் தொகுதியிலே எந்தப் பள்ளியைத் தரம் உயர்த்த வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குக் கடிதம் கொடுப்பதோடு மட்டுமல்லாமல், வினாவாக எழுப்பவும், கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்தும், அந்த ஆண்டு அது கிடைக்காத நிலையிலே, நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலே நேரிலே சென்றுகூட வருத்தப்பட்டேன். இந்த ஆண்டு கட்டாயமாகக் கொடுக்கிறேன் என்று சொன்னார்; அதன் அடிப்படையிலே கொடுத்தார். (குறுக்கீடு) அதிலே ஒரு விஷயம் இருக்கிறது, அதற்காகச் சொல்கிறேன். ஒரு நிமிடம் கொடுங்கள். ஆனால், அந்தப் பகுதி மக்கள் சட்டமன்ற உறுப்பினர் நீங்கலாக, மற்றவர்களுக்கு அங்கு wall poster அடித்தார்கள். அப்போதுதான் நாங்கள் தெரிந்துகொள்ளக்கூடிய ஒரு நிலை இருக்கிறது. எனவே, இங்கே சட்டமன்ற உறுப்பினர்களுக்கு (குறுக்கீடு) ஒரு நிமிடம். இதுபோன்ற நிலை...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. தமிழரசு, நீங்கள் வைத்த கோரிக்கை நிறைவேறி இருக்கிறது; நன்றி சொல்லிவிட்டுப் பேசாமல் உட்காருங்கள். (குறுக்கீடு) உங்கள் ஊரில் poster அடிக்கவில்லை என்பதற்கான காரணத்தைச் சொல்லிக்கொண்டிருக்காதீர்கள்.

திரு. அ. தமிழரசு: பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு நிமிடம். துறை சார்பாக இதுபோன்ற நிலைகளை...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஊரிலே poster அடிக்காதது குறித்து, சட்டமன்றத்திற்கு வந்து கேட்க முடியாது. (குறுக்கீடு) சொல்லுங்கள்.

திரு. அ. தமிழரசு: பேரவைத் தலைவர் அவர்களே, அதை நிலைப்படுத்த வேண்டுமென்று சொல்கிறோம்; வேறு ஒன்றுமில்லை. சட்டமன்ற உறுப்பினர்களுக்கு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், துறை வழியாக ஒரு கடிதம்மூலம் தகவல் தெரிவிக்க வேண்டுமென்று நாங்கள் கேட்டுக்கொள்கிறோம். அங்கே சட்டமன்ற உறுப்பினர்கள் எதுவும் செய்யவில்லை என்று மக்கள் நினைக்கிறார்கள். சட்டமன்ற உறுப்பினரைத் தனிப்பட்ட முறையில் இது பாதிக்கிறது. எனவே, இதை நான் அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்; அவையினுடைய கவனத்திற்கும் கொண்டு வருகிறேன். இனிவரும் காலங்களிலே சட்டமன்ற உறுப்பினர் பரிந்துரையிலே இது செய்யப்பட்டது என்று மாண்புமிகு அமைச்சர் அறிவிக்கச் செய்வாரா என்று தங்களின்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு பள்ளியும் தரம் உயர்த்தப்படுகிறபோது, தரம் உயர்த்தப்பட்டிருக்கக்கூடிய பள்ளிகளின் பட்டியல் அரசாணையாக வெளியிடப்படுகிறது. அந்த அரசாணையினுடைய ஒரு பகுதியாக இன்னின்ன பள்ளிகளையெல்லாம் தரம் உயர்த்தியிருக்கிறோம் என்று கொடுக்கிறோம். சட்டமன்ற உறுப்பினர்கள், இந்த அவையிலே பல பள்ளிகளைத் தரம் உயர்த்த வேண்டுமென்று கோரிக்கை விடுத்திருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதைப்போல, சட்டமன்ற உறுப்பினர்கள் மாத்திரமல்ல; அந்தப் பகுதியிலே இருக்கக்கூடிய மற்றவர்களும் சேர்ந்து இந்தக் கோரிக்கையை வலியுறுத்தி இருக்கிறார்கள். பொது மக்கள் இருக்கிறார்கள்; பல்வேறு அரசியல் அமைப்புகள் இருக்கின்றன; மாணவர் சங்கங்கள், பெற்றோர்-ஆசிரியர் சங்கங்கள் எல்லோரும் வற்புறுத்தி இருக்கிறார்கள். இந்தப் பள்ளியைக்கூட தரம் உயர்த்திட வேண்டுமென்று நம்முடைய மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் மிகுந்த ஆர்வம் கொண்டு, அவரும் சேர்ந்து, இதைத் தரம் உயர்த்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். எனவே, எல்லோருடைய கோரிக்கையையும் ஏற்று அது நிறைவேற்றப்பட்டிருக்கிறதேயொழிய, தனிப்பட்ட ஒரு சட்டமன்ற உறுப்பினருக்கு நீங்கள் சொல்லித்தான்

2009 ஜூலை 20]

அதைச் செய்திருக்கிறேன் என்று அவருக்கு மாத்திரம் நான் தகவல் தெரிவிப்பது அவ்வளவுப் பொருத்தமாக இருக்காது என்பதுதான் என்னுடைய கருத்து. எனவே, இதுவே என்னுடைய பதிலாகவும் அமைந்திருக்கிறது.

முற்பகல் 10-15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. தமிழரசு.*

திரு. அ. தமிழரசு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதியில் பண்ணைப்பட்டி என்ற இடத்திலுள்ள ஒரு மேல்நிலைப் பள்ளியில் 2,500 மாணவர்கள் படித்துக்கொண்டிருக்கிறார்கள். அதிலே பெண்கள் மட்டும் 1,050 பேர் இருக்கிறார்கள். அந்தப் பெண்களின் நலனைக் கருதி, பெண்களுக்கென்று தனியாக ஒரு பள்ளியைத் தொடங்க வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சரிடத்திலே வேண்டுகோள் வைத்திருந்தேன். நான் உறுப்பினராக இருந்த மனுக்கள் குழுகூட, அரசுக்குப் பரிந்துரை செய்திருக்கிறது, எனவே, மாண்புமிகு அமைச்சரவர்கள் இந்த ஆண்டு அதைப் பரிசீலித்து, பெண்களுக்கென்று தனியாக ஒரு பள்ளியைத் தொடங்குவதற்கு அனுமதி தருவார்களா என்று தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள், இதுபற்றி ஏற்கெனவே என்னிடம் நேரிலேயே தெரிவித்திருக்கிறார்கள். வரக்கூடிய காலங்களில் நிதிநிலைமைக்கேற்ப பள்ளிகளை உருவாக்குகின்றபோது, அவருடைய கோரிக்கை பற்றியும் அரசு நிச்சயமாகப் பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. அருண்மொழிதேவன்.*

திரு. ஆ. அருண்மொழிதேவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் தற்போது பள்ளிகளைத் தரம் உயர்த்த வேண்டுமென்றால், நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்துவதற்கு ஒரு இலட்சம் ரூபாயும், உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்துவதற்கு இரண்டு இலட்சம்

ரூபாயும் அரசுக்குச் செலுத்த வேண்டுமென்ற விதி, நடைமுறையில் உள்ளது. ஆனால், அந்தத் தொகையை வசூலித்துச் செலுத்துவதற்குப் பொது மக்கள் மிகுந்த சிரமப்படுகின்ற நிலை தமிழகம் முழுவதும் இருக்கிறது. எனவே, அரசு, விதிகளைத் தளர்த்தி இந்தத் தொகையைக் குறைப்பதற்கோ அல்லது இரத்து செய்வதற்கோ முன்வருமா என்பதைத் தங்கள்மூலம் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாகப் பள்ளிகளைத் தரம் உயர்த்த வேண்டுமென்றால், அந்தப் பகுதியிலே இருக்கின்ற பொது மக்களுடைய பங்களிப்பும் தேவை. அவர்களும் அதிலே ஆர்வம் காட்ட வேண்டும். மேலும் பள்ளிக்கு வேண்டிய சில அடிப்படை வசதிகளை உருவாக்குவதில் Community participation இருக்கவேண்டுமென்ற வகையிலேதான், இந்த விதி வரையறுக்கப்பட்டிருக்கிறது. இன்றைக்கு இருக்கின்ற சூழ்நிலையில் உள்ளபடியே பார்த்தோமானால், ஒரு இலட்சம் ரூபாயோ அல்லது இரண்டு இலட்சம் ரூபாயோ கட்டுவது என்பது பெரிய தொகையாக இல்லை. ஆனால், சில இடங்களில் மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டதைப்போல, ஆதி திராவிட மக்கள் அதிகமாக வசிக்கக்கூடிய பகுதிகளில், பெண்களுக்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டிய நிலையில் இருக்கும் பகுதிகளில், கல்வியிலே மிகவும் பின்தங்கிய நிலையில் இருக்கக்கூடிய முக்கியமான பகுதிகளில், இந்தத் தொகையைக் கட்ட முடியாத சூழ்நிலை இருக்கும் என்று சொன்னால், அரசு அதுபோன்ற பல இடங்களில் விதிவிலக்கு அளித்திருக்கிறது. அப்படிப்பட்ட பகுதியை யாராவது சுட்டிக்காட்டி அரசுக்குத் தெரிவித்தால், அரசு விதிவிலக்கு அளிப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது. எனவே, அதுபோன்ற நிகழ்வுகளிலே அரசு நிச்சயமாக நடவடிக்கை எடுக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். அன்பழகன்.

திரு. எம். அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், இரண்டாவது முறையாக ஆட்சியிலே இருந்தபோது, அப்போதைய பழனி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் மரியாதைக்குரிய புலவர் பழனிசாமி அவர்களுடைய

2009 ஜூலை 20]

வேண்டுகோளை ஏற்று, 1-7-1974-ல் பழனி ஒன்றியத்திலுள்ள பாப்பம்பட்டி நடுநிலைப் பள்ளியை அப்போது Board High School -ஆகத் தரம் உயர்த்தினார்கள். அதன்பின், உயர்நிலைப் பள்ளியாகப் பெயர் மாற்றப்பட்டு, அப்பள்ளி இயங்கி வருகிறது. அப்பகுதியில் 80 சதவிகிதம் மக்கள் கூலி வேலைக்குச் செல்பவர்கள். அவர்களுடைய குழந்தைகள் ஏறக்குறைய 900 பேர் அப்பள்ளியில் படிக்கிறார்கள். 10-வது வகுப்பு, 2 வகுப்புகள் மட்டுமே இருக்கின்றன. அதிலே 100 மாணவர்களுக்குமேல் படிக்கிறார்கள். அதிலும் குறிப்பாக, ஆதி திராவிட மாணவர்கள், 70 சதவிகிதம் அப்பள்ளியில் படிக்கிறார்கள். வசதி படைத்த குழந்தைகள் படிக்கவில்லை. அவர்களுக்குப் பணம் கட்டக்கூடிய சூழ்நிலை இல்லை. இருந்தபோதிலும், வசூல் செய்து இரண்டாண்டுகளுக்கு முன்பே பணத்தைக் கட்டிவிட்டார்கள். அங்கு, வேண்டிய அளவு, இட வசதியும் உண்டு. என்னுடைய தொகுதியில் ஒரு மேல்நிலைப் பள்ளிகூட இல்லை. எனவே, 35 ஆண்டுகளாக உள்ள இந்த உயர்நிலைப் பள்ளியை, மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் சிறப்பு அனுமதியைப் பெற்று, மாண்புமிகு அமைச்சரவர்கள் மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தித் தருவார்களா என்று தங்கள்மூலம் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாப்பம்பட்டி உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினரவர்கள் தொடர்ந்து வலியுறுத்திக் கொண்டிருக்கிறார்கள். இதே கோரிக்கையை, நமது மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களும், மாண்புமிகு கொறடா சகோதரர் சக்ரபாணி அவர்களும் என்னிடம் வலியுறுத்தி இருக்கிறார்கள். எனவே, வரக்கூடிய ஆண்டுகளில் கூடுதலாகப் பள்ளிகளைத் தரம் உயர்த்துவதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் அனுமதி வழங்கக்கூடிய நிலையில், அவருடைய கோரிக்கையை அரசு நிச்சயமாகப் பரிசீலித்து ஆவன செய்யும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 178, மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.ஆர். ரெங்கராஜன், மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.